பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

13 08 2024 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குஜராத் மாநிலம் சூரத்தில் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ் பொதுமக்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள் பெருமை அளிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. நாட்டின் சில்லரை பணவீக்க விகிதம், 59 மாதங்களுக்கு பிறகு ஜூலையில் மூன்று புள்ளி ஐந்து நான்கு சதவீதமாக குறைந்துள்ளது.

3. இந்திய ரயில்வே மற்றும் நமோ பாரத் ரயில் பயணிகளுக்கு “ஒரே நாடு – ஒரே பயணச்சீட்டு” என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

4. ஈரான் துணை அதிபர் முகமது ஜாவத் ஜெரீப் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றதன் மூலம் இந்திய ஹாக்கி அணி, சர்வதேச தரவரிசைப்பட்டியலில் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

*<u>- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>**

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தின்கீழ் குஜராத் மாநிலம் சூரத்தில் பொதுமக்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள் பெருமை அளிக்கக்கூடியதாக உள்ளது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சூரத்தில் மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி தலைமையில் ஏராளமானோர் தேசியக்கொடியுடன் பங்கேற்ற காணொளியை தமது சமூக வலைதளத்தில் பிரதமர் பதிவிட்டுள்ளார்.

அனைத்து நிகழ்ச்சிகளையும் சூரத் மக்கள் ஆர்வத்துடன் மேற்கொண்டிருப்பதாகவும், இல்லந்தோறும் தேசியக்கொடி நிகழ்ச்சியும் அதற்கு விதிவிலக்கு அல்ல என்றும் பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் அஞ்சல் நிலையங்களில் தேசியக்கொடியை ஆர்வத்துடன் வாங்கி செல்வதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*<u>(வாய்ஸ் பைட் - முருகேசன் - 40 செகண்ட்ஸ்)</u>*

**<<<<<<>>>>>**

நாட்டின் சில்லரை பணவீக்க விகிதம் இந்தாண்டு ஜூலை மாதத்தில் 59 மாதங்களுக்கு பிறகு மூன்று புள்ளி ஐந்து நான்கு சதவீதமாக குறைந்துள்ளது.

மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், காய்கறிகள் மற்றும் பழங்களின் விலை குறைந்ததன் காரணமாக கடந்த மாதத்தில் இந்த குறைவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு பணவீக்கத்தை பொறுத்தவரை கடந்தாண்டு ஜுன் மாதத்திற்கு பிறகு கடந்த மாதத்தில் ஐந்து புள்ளி நான்கு இரண்டு சதவீதமாக குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

நாட்டின் ஒட்டுமொத்த நேரடி வரி வசூல் கடந்த ஏப்ரல் ஒன்றாம் தேதிமுதல், இம்மாதம் 11-ஆம் தேதிவரை சுமார் 24 சதவீதம் உயர்ந்து, எட்டு லட்சத்து 13 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

கடந்தாண்டு இதேகாலத்தில் 6 லட்சத்து 55 ஆயிரம் கோடி ரூபாய் வசூலானதாக வருமானவரித்துறை தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்த வரி வசூலை பொறுத்தவரை 22 புள்ளி நான்கு எட்டு சதவீதம் உயர்ந்து, ஆறு லட்சத்து 93 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்திருப்பதாக வருமானவரித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**<<<<<<>>>>>**

இந்திய ரயில்வே மற்றும் நமோ பாரத் ரயில்களில் பயணம் மேற்கொள்பவர்களுக்கு "ஒரே நாடு – ஒரே பயணச்சீட்டு" என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

**IRCTC** மற்றும் **NCRTC** இணைந்து இதனை செயல்படுத்த உள்ளது.

இதன்மூலம் பயணிகள் சிரமமின்றி பயணம் மேற்கொள்ள '**IRCTC** ' தளத்தில் நமோ பாரத் ரயில்களுக்கான பயணச்சீட்டுகளை எளிதாக முன்பதிவு செய்யவும், ரத்து செய்யவும் முடியும்.

பயணிகள் **QR** கோடு மூலம் நமோ பாரத் பயணச்சீட்டுகளை பெற முடியும் என்றும், இந்த **QR** கோடு பயண தேதிக்கு நான்கு நாட்கள் முன்னர் வரை செல்லும் என **IRCTC** அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

நமோ பாரத் ரயில் பயணச்சீட்டுகளை 120 நாட்கள் முன்னதாகவே, தற்போதைய நடைமுறையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனமான **EPFO** இன்று தனது ஐந்தாவது நேரடி பரிமாற்ற நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளது.

**EPFO** உறுப்பினர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு பல்வேறு சேவைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்த நிறுவனத்தின் சமூக வலைதள பதிவில், நேரடியாக இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும் என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதியை மாற்றிக்கொள்ளுதல், அதற்கான நடைமுறைகள் மற்றும் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நிபுணர்கள் அளிக்கும் பதில்கள் உள்ளிட்டவை இந்த நிகழ்ச்சியில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>>**

ஒளிபரப்பு சேவைகள் வரைவு மசோதா குறித்த பரிந்துரைகளை வழங்க வரும் அக்டோபர் 15-ஆம் தேதிவரை கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்த மசோதா விரிவான ஆலோசனைக்கு பின்னர் வெளியிடப்படும என்று தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் மற்றும் மசோதாவுடன் தொடர்புடையவர்களின் விளக்கத்துடன் ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்த வரைவு மசோதா கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப்பட்டது.

இதுதொடர்பாக, பல்வேறு பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகள் வரப்பெற்றிருப்பதாகவும் தெரிவித்துள்ள அந்த அமைச்சகம், விரிவான ஆலோசனைகளுக்கு பின்னர் வரைவு மசோதா வெளியிடப்படும் என்று கூறியுள்ளது.

<<<<<<>>>>>

வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து, மூன்று மாதங்களில் மருத்துவம் உள்ளிட்ட அவசர தேவைக்காக பணத்தை திரும்பப்பெற முதலீட்டாளர்கள் கோரினால், எந்தவித பிடித்தமும் செய்யாமல் தொகையை திருப்பி கொடுக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி அறிவுறுத்தியுள்ளது.

இதுபோன்ற முன்கூட்டியே முதலீடு தொகையை திரும்பப்பெறுவதற்கு வட்டி எதுவும் அளிக்க தேவையில்லை என்று ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

இயற்கை பேரிடர், மருத்துவம் போன்ற செலவினங்கள் அல்லாமல் வேறு தேவைக்காக பணத்தை திரும்பப்பெற விரும்பும் முதலீட்டாளர்களுக்கு வட்டி இன்றி 50 சதவீத தொகை வரை திருப்பி அளிக்கலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சம் ஐந்து லட்சம் ரூபாய் அல்லது 50 சதவீத தொகையில் எது குறைவாக உள்ளதோ அந்த தொகையை முன்கூட்டியே வழங்க வேண்டும் என ரிசர்வ் வங்கி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நாட்டின் வடகிழக்கு மற்றும் கிழக்கு மாநிலங்களிலும், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசத்திலும் அடுத்த ஏழு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் மாநிலங்கள் மற்றும் மத்திய மாநிலங்களில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாக வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

தமிழகம், ராயலசீமா, கேரளா மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கு இந்த ஆரஞ்ச் எச்சரிக்கை விடப்பட்டிருப்பதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

இந்தியா - இலங்கை இடையேயான கூட்டு ராணுவ பயிற்சி நேற்று தொடங்கியது.

மித்ரா சக்தி என்ற பெயரில் இரு நாடுகளுக்கும் இடையேயான ராணுவ பயிற்சி வரும் 25-ஆம் தேதிவரை இலங்கையில் உள்ள ராணுவ பயிற்சி பள்ளியில் நடைபெறவிருப்பதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியா சார்பில் ரஜபுத்னா ராணுவப்படை வீரர்கள் பிரதானமாக பங்கேற்றிருப்பதாகவும், அவர்களுடன் பிற ஆயுதப்படை வீரர்களும் பயிற்சியில் ஈடுபட இருப்பதாகவும் அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

ஈரான் துணை அதிபர் முகமது ஜாவத் ஜெரீப் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

இதனை சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், ஈரான் நிர்வாக அமைச்சரவை உறுப்பினர்களை தேர்வு செய்வதில் தமது பணி திருப்தி அளிக்காததால் இந்த முடிவை எடுத்ததாக கூறியுள்ளார்.

துணை அதிபராக நியமிக்கப்பட்டு 11 நாட்களில் அவர் பதவி விலகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>

கிரீஸ் நாட்டில் ஏற்பட்ட காட்டுத்தீ ஏதேன்ஸ் புறநகர் பகுதிகளுக்கும் பரவியதால், நூற்றுக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த காட்டுத்தீயால் ஏராளமான மரங்கள், வீடுகள் மற்றும் வாகனங்கள் எரிந்து சேதமடைந்ததாகவும், முக்கிய சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகவும் கிரீஸ் அரசு தெரிவித்துள்ளது.

காட்டுத்தீயை கட்டுப்படுத்த ஐரோப்பிய யூனியன் நாடுகள் உதவ வேண்டும் என்று கிரீஸ் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

வேகமாக வீசும் காற்றின் காரணமாக, தீ பரவியதாகவும், தீயை அணைக்கும் பணியில் தீயணைப்புத்துறையினர் ஈடுபட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**<<<<<<>>>>>**

பாலஸ்தீனத்தின் காஸா அமைதி பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டபடி நடைபெறும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை தெரிவித்துள்ளது.

வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு வேதாந்த் பட்டேல், அமைதி பேச்சுவார்த்தைகளின் மூலம் சண்டை நிறுத்தம் சாத்தியமாகும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

எனினும், இந்த பேச்சுவார்த்தையில் பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பு பங்கேற்பது குறித்து உறுதி செய்யப்படவில்லை.

**<<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றதன் மூலம் இந்திய ஹாக்கி அணி, சர்வதேச தரவரிசைப்பட்டியலில் ஐந்தாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பு வெளியிட்டுள்ள தரவரிசைப்பட்டியலில், 2 ஆயிரத்து 848 புள்ளிகளுடன் இந்திய அணி இரண்டு இடங்கள் முன்னேறி இந்த இடத்தை பிடித்துள்ளது.

நெதர்லாந்து அணி முதலிடத்திலும், ஜெர்மனி இரண்டாவது இடத்திலும், இங்கிலாந்து மூன்றாவது இடத்திலும் உள்ளன.

**<<<<<<>>>>>**

பாரிஸ் ஒலிம்பிக்கில் தகுதி நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து, இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் செய்த மேல் முறையீடு தொடர்பாக சர்வதேச விளையாட்டு தீர்ப்பாயம் இன்று தீர்ப்பளிக்கவுள்ளது.

பிரசார் பாரதியுடன் இணைந்து, **BCL** எனப்படும் **Big** கிரிக்கெட் லீக் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டிகள் வரும் செப்டம்பர் மாதம் லக்னோவில் தொடங்கவுள்ளன.

**<<<<<<END>>>>>**